## முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரியலூர்.

## Succession O.P.No. 30/2021

**நாள்: 15.12.2022**

ம.சா.1 அஞ்சம்மா என்பவர் ஆஜர். பிரமாணம் செய்யப்பட்டு, முதல் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடரப்பட்டது.

என் கணவரும், முதல் எதிர்மனுதாரரும் திருமழப்பாடியில் இடம் வாங்கி அதில் வீடுகட்டி கொண்டு அங்குதான் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் வீடுகட்டி குடிபோன விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். முதல் எதிர்மனுதாரரின் குழந்தைகளுக்கு காதணி விழா பத்திரிக்கை அடித்து என் கணவர் நடத்திய விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனக்கு தெரிந்துதான் என் கணவரும், முதல் எதிர்மனுதாரரும் கணவன் மனைவியாக 15 ஆண்டுகள் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். சொத்திற்காக என் கணவரை என் தூண்டுதலின்பேரில் என் மகன்கள் கொலை செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. என் மகன்கள் மீது என் கணவரை கொலை செய்ததாக கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது என்றால் சரிதான், அது பொய் வழக்கு. என் கணவர் முதல் எதிர்மனுதாரருடன் இருந்தபோதும் எங்கள் குடும்பத்தை கவனித்து வந்தார் என்றால் சரிதான். என் கணவர் கொலை செய்யப்பட்டு இறந்த சமயத்தில் என்னுடைய மகன் ஒருவன் சென்னையில் வேலை இருந்தார், மற்றொரு மகன் கல்லூரி படித்து கொண்டிருந்தான். என் மகன்களும், நானும் சொத்தை எங்கள் பெயருக்கு எழுதி கொடுக்கும்படி என் கணவரை மிரட்டி வந்தோம் என்றால் சரியல்ல. பஞ்சாயத்து மூலமாக சொத்தை எழுதிக் கொடுத்தார். எதிர்மனுதாரர் மீதுள்ள அன்பின் காரணமாக என் கணவர் அவருடன் தொடர்ந்து வாழ்க்கை நடத்தி வந்த காரணத்தால் அவரை நாமினியாக போட்டு பாலிசி எடுத்துள்ளார் என்றாலும், அதில் நானும், என் மகன்களும் உரிமை கோர முடியாது என்றாலும் சரியல்ல. இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை எதுவும் இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**(ஒம்)செல்வி.எஸ்.மகாலெட்சுமி,**
**முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரியலூர்.**